கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

எதிரி தரப்பு 2 வது சாட்சி (எ.த.சா.2)

STC No.19/2023

| | | |
|---|---|---|
| பெயர் | - | அபினேஷ் |
| த/பெ | - | ஸ்ரீதரன் |
| கிராமம் | - | |
| தாலுகா | - | |
| தொழில் | - | |
| ஜாதி | - | |
| மதம் | - | |
| வயது | - | 30 |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை

நான் வள்ளியூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வள்ளியூர் காவல் ஆய்வாளருக்கு சாட்சியம் அளிப்பதற்கும், ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கும் அழைப்பாணை வந்தது. அழைப்பாணை வந்ததின் பேரில் காவல் ஆய்வாளர் எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கும், ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கும் அதிகார ஆவணம்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.06 04:29:37 +0530

கொடுத்துள்ளார்.

| எ.த.சா.ஆ. | தேதி | ஆவணம் | விபரம் |
|---|---|---|---|
| 1 | 06.09.2024 | அதிகார ஆவணம் | அசல் |

அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். 10.02.2023 ல் சந்திரபோஸ் மகன் ஜெய ஸ்டிபின் ஸ்டுவர்டு என்பவர் புகார் கொடுத்துள்ளார். அந்த புகார் எங்கள் காவல் நிலையத்தில் மனு ரசீது எண்.111/2023 ஆக 17.02.2023 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகாரில் இருதரப்பினரையும் விசாரித்து எழுத்து மூலமாக வாக்குமூலம் வாங்கப்பட்டது. அந்த புகார் மனு, புகார் மனுவில் கொடுத்த ரசீது, மனுதாரர் மற்றும் எதிரியின் வாக்குமூலங்கள் தற்போது **எ.த.சா.2**, **எ.த.சா.3**, **எ.த.சா.4** ஜெய ஸ்டிபின் ஸ்டுவர்டு (1- வாக்குமூலம்), **எ.த.சா.5** அந்தோணி அலிஸ்டரின் (2-வாக்குமூலங்கள்).

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணையானது மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.06 04:29:46 +0530